நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பார்த்தீனியம் களைகள் ஒழிப்பு முகாம்**

First Published : 29 Aug 2011 09:12:24 AM IST

மானாமதுரை, ஆக. 28: மானாமதுரை வட்டார அளவில் வேளண்மைத் துறை மூலம் பார்த்தீனியம் களை ஒழிப்பு முகாம் நடைபெற்றது.

மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் பி.பொன்காத்த பெருமாள் தலைமை தாங்கினார். ஊராட்சி ஒன்றியத் தலைவர் கே.தங்கமணி முன்னிலை வகித்தார். மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) எஸ்.வெள்ளைச்சாமி முகாமில் பங்கேற்று, பார்த்தீனியம் களை பற்றிய தீமைகளை விவசாயிகளிடம் விளக்கிக் கூறினார்.

மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் எஸ்.நடராஜன், ஆர்.தனபாலன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜேந்திரன், சங்கர்கணேஷ், பாண்டியம்மாள், முருகேசன், உதவி விதை அலுவலர் கென்னடி ஆகியோர் பேசினர்.

முகாமுக்கான ஏற்பாடுகளை மானாமதுரை வட்டர வேளாண்மை உதவி இயக்குநர் பரமேஸ்வரன் செய்திருந்தார்.

**கொள்முதல் மையங்களில் தேங்கிக் கிடக்கும் நெல் மூட்டைகள்**

First Published : 29 Aug 2011 07:07:08 AM IST

காஞ்சிபுரம், ஆக. 28: வாலாஜாபாத் அருகே உள்ள பல்வேறு அரசு நெல் கொள்முதல் மையங்களில் நெல் கொள்முதல் செய்யப்படாததால் நெல் மூட்டைகள் ஆயிரக்கணக்கில் தேங்கிக் கிடக்கின்றன். திறந்த வெளியில் தேங்கிக் கிடக்கும் இந்த நெல் மூட்டைகளில் முளை கட்டுவதால் விவசாயிகள் பெரும் கவலைக்கு ஆளாகியுள்ளனர்.

காஞ்சிபுரம் மாவடத்தில் வாலாஜாபாத் அருகே அவளூர், காவாந்தண்டலம், திருமுக்கூடல், அரும்புலியூர், தென்னேரி ஆகிய இடங்களில் அரசு நெல் கொள்முதல் மையங்கள் உள்ளன. இந்த நெல் கொள்முதல் மையங்களில் பல நாள்களாக விவசாயிகள் கொண்டு வந்த நெல் கொள்முதல் செய்யப்படாமல் உள்ளன. இவர்கள் கொண்டு வந்த நெல் அங்குள்ள திறந்தவெளி களத்தில் அடுக்கி வைக்கப்பட்டு மழையில் நனைந்த நிலையில் உள்ளன. இதனால் நெல் முளைகட்டத் தொடங்கியுள்ளது.

குறிப்பாக அவளூர் கிராமத்தில் உள்ள அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் இதுபோல் சுமார் 2000 நெல் மூட்டைகள் தேங்கியுள்ளன. இந்த நெல் கொள்முதல் நிலையத்தில் கடந்த ஒரு மாதமாக நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படவில்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த கொள்முதல் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்ட நெல் மூட்டைகள் வைப்பதற்கு இடம் இல்லாமல் களங்களில் திறந்த வெளியில் வைக்கப்பட்டுள்ளன. இவைகள் மழையில் நனைந்த நிலையில் முளைகட்டத் தொடங்கியுள்ளன. பாடுபாட்டு கொண்டு வந்து சேர்த்த நெல் தங்கள் கண் முன்னால் பழாவதைக் கண்டு நாங்கள் துடித்துபோய் உள்ளோம் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து காளிதாஸ் என்ற விவசாயி கூறுகையில் நான் எனது நெல் மூட்டைகளை கொண்டு வந்து ஒரு மாதம் ஆகிறது. நான் கொண்டு வரும்போது நெல் நன்றாக இருந்தது. ஒரு மாதமாக எடுக்காததால் நெல் மழையில் நனைந்து தற்போது முளைகட்டத் தொடங்கியுள்ளது. இந்த நெல்லை நம்பித்தான் எங்கள் குடும்ப வருமானம் உள்ளது என்றார்.

ராஜேந்திரன் என்ற விவசாயி கூறுகையில் எடைபோட்டு வாங்கி வைக்கப்பட்ட நெல் கூட களத்தில் இருந்து எடுக்கப்படவில்லை. விற்ற விவசாயிக்கு நெல்லுக்கு உரிய பணமும் கொடுக்கப்படவில்லை என்றார்.

நெல் எப்போது கொள்முதல் செய்வார்கள் என்று தெரிந்தால் நாங்கள் வீட்டில் வைத்திருந்து கூட எடுத்து வருவோம். களத்துக்கு வரும் நெல்லுக்கு டோக்கன் போடுகிறார்கள். அந்த வரிசைப்படி நெல் வாங்குவர். அதனால் நாங்கள் அவசரமாக கொண்டு வந்த நெல் மூட்டைகள் வாங்கப்படாமல் களத்திலேயே உள்ளன. இங்கு நெல் சேமித்து வைக்கும் இடமும் இல்லை. எனவே நெல் மூட்டைகள் மழையில் நனைத்து பாழாவதாக பல விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து இயற்கை விவசாயிகள் சங்கத் தலைவர் தேவராஜ் கூறுகையில் அவளூர் மட்டும் அல்ல, காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு நெல் கொள்முதல் மையங்களில் இதுபோன்ற நிலைதான் உள்ளது. தற்போது அறுவடை நேரம். என்பதால் விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்வதற்கு மாவட்ட நிர்வாகம் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு உரிய தொகை விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றார்.

கலையும், இலக்கியமும் மனிதனை செம்மைப்படுத்துகிறது

புதுச்சேரி, ஆக. 27: கலையும், இலக்கியமும் மனிதனை செம்மைப்படுத்துகிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலச் செயலர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி கலை இலக்கிய பெருமன்றம் சார்பில் கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் ஜீவா பிறந்தநாள் விழா மற்றும் கலை இலக்கிய பெருமன்ற பொன்விழா ஆண்டு தொடக்க விழா சாரம் ஜீவா சிலை அருகில் சனிக்கிழமை

நடந்தது.

இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலர் தா.பாண்டியன் பேசியது:

கலையும் இலக்கியமும் ஒரு மனிதனை செம்மைப்படுத்துகிறது. மனிதன் தோன்றியபோது இலக்கியங்கள் வரவில்லை. அவன் குடும்பமாக வாழ்ந்தபோது தான் அவனிடமிருந்து சொல் பிறந்தது. அதன் பரிணாமமே இலக்கியம். மொழிகளிலேயே தொன்மையான மொழி தமிழ் தான். தொன்மையாக கருதப்பட்ட லத்தீன் வேத குருமார்கள் மட்டும் பேசும் மொழியாக உள்ளது.

உலகம் முழுவதும் பேசப்படும் ஆங்கில மொழிக்கு இலக்கிய வரலாறு 500 ஆண்டுகள் தான். அதில் ஒவ்வொரு நூற்றாண்டும் ஒரு ஆங்கிலமாக தொடர்பின்றி உள்ளது. தற்போது நிலைப்பெற்று இருக்கும் ஆங்கிலத்தில் பிரிட்டிஷ் ஆங்கிலம், அமெரிக்க ஆங்கிலம் என்று இரு வகைகள் உள்ளன.

தொன்மையான மொழிகள் என்று கூறப்படும் மொழிகள் பல சுருங்கிவிட்டன. ஆனால் தமிழ் இன்றும் செம்மொழி அந்தஸ்துடன் செம்மையாக வாழ்ந்து வருகிறது. அதற்கு காரணம் கலை இலக்கிய பெருமன்றம் போன்ற அமைப்புகள் தோன்றியதால் தான். தமிழகத்தில் கடந்த 11 ஆண்டுகளாக சாகித்ய விருது பெறுபவர்களில் 10-ல் 9 பேர் கலை இலக்கிய பெருமன்றத்தினராகவே இருக்கிறார்கள். இந்த இலக்கிய பெருமன்றம் தேர்தலை குறிவைத்து என்றும் பணியாற்றியதில்லை. தமிழ் மொழியையும், தமிழ் இலங்கியங்களையும் வளர்க்கவே பாடுபட்டு வருகிறது.

மேலை நாடுகளில் டிவி வந்த பிறகு செய்தித்தாள் நிறுவனங்கள் மூடுவிழா கண்டு வருகின்றன. செய்தித்தாள்களை கல்வி கற்றவர்கள் மட்டுமே படிக்க முடியும். டிவியை விழி உள்ள அனைவரும் பார்க்க முடிகிறது. முன்பு எதிரிகளை குண்டுபோட்டு அழிக்க வேண்டியிருந்தது. இன்று தனது கருத்துகளை திணித்து, இனிமையாக தங்கள் எதிரிகளை கொள்ளும் கருவியாக டிவி இருந்து வருகிறது. இந்நிலையில் நூல்களை படிக்கும் மக்கள் தமிழகத்தில் குறைந்து விடுவார்களோ என்ற அச்சம் எல்லோர் மத்தியிலும் இருந்தது. ஆனால் மக்கள் மத்தியில் படிக்கும் எண்ணம் மேலோங்கியே உள்ளது.

1960-ம் ஆண்டில் தமிழகத்தில் 7 பதிப்பகங்கள் மட்டுமே இருந்து, இன்று 100-க்கும் மேற்பட்ட பதிப்பகங்கள் வந்துள்ளன. கடைசியாக சென்னையில் நடந்த புத்தகக் கண்காட்சியில் அதற்கு முந்தைய ஆண்டை விட ரூ.3 கோடி அளவுக்கு கூடுதலாக புத்தகங்கள் விற்பனையாகி இருப்பதாக கண்காட்சியினர் கூறும் புள்ளி விவரங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரரிவாளன் ஆகியோரின் தூக்குத் தண்டனை ரத்துசெய்யப்பட வேண்டும். அவர்கள் ஏற்கெனவே 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருந்து வருகின்றனர். ஒரு குற்றத்துக்கு இரு தண்டனை வழங்க முடியாது. அதனால் தமிழக அரசு தலையிட்டு தூக்கு தண்டனையை நிறுத்த வேண்டும் என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி செயலர் நாரா.கலைநாதன், தேசிய குழு உறுப்பினர் ஆர்.விஸ்வநாதன், பொருளாளர் எ.மு.சலீம், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற பொதுச் செயலர் காமராசு, புதுச்சேரி பொதுச் செயலர் எல்லை. சிவக்குமார், பொருளாளர் மு.பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**இயற்கை வேளாண்மை பயிற்சிப் பட்டறை**

First Published : 29 Aug 2011 07:08:29 AM IST

உத்தரமேரூர், ஆக. 28: உத்தரமேரூர் தாலுகா கட்டியாம்பந்தல் கிராமத்தில் இயற்கை வேளாண்மைக்கான பயிற்சிப் பட்டறை மற்றும் விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடந்தது.

சேவாலயா நிர்வாக இயக்குனர் வி.முரளிதரன் தலைமை தாங்கினார். கண்ணன் இராஜகோபாலன் வரவேற்றார். டாக்டர் குமரவேல் முன்னிலை வகித்தார்.

இதில் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசியது: இயற்கையைப் புரிந்து வாழ்ந்தால் சுகமான வாழ்க்கை வாழலாம். இயற்கை போலவே சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாமல் நடந்துகொள்ள வேண்டும். மனிதன் உடல் உழைப்பைத் தவிர்ப்பதால் நோயால் பாதிப்பு அடைய வேண்டிய நிலை உருவாகிறது. ஒருவன் தன் வயிரோடு வாழ்வது மிகவும் கடினமானக் காரியம் என்று கூறிய அவ்வையாரின் பொன்மொழி உண்மை. சாப்பாட்டில் கட்டுப்பாடு தேவை. பழங்கள் ஒருவேளை சாப்பிட்டால் நல்லது என்றார்.

இம்முகாமில் காட்டுக்கொல்லை, நாஞ்சிபுரம், ஆள்வராம்பூண்டி, கம்மாளம்பூண்டி, காரியமங்கலம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள் கலந்துகொண்டனர். சத்தியபாமா கண்ணன் நன்றி கூறினார்.

**கரும்புக்கான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்**

First Published : 28 Aug 2011 02:52:18 PM IST

அறந்தாங்கி, ஆக. 27: கரும்புக்கான தொகை கரும்பு வெட்டப்பட்ட 14 நாள்களுக்குள் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு, அவர்களின் செல்போனுக்கு எஸ்.எம்.எஸ். மூலம் தெரிவிக்கப்படும் என்றார் குரும்பூர் ஈ.ஐ.டி. பாரி இந்தியா லிமிடெட் நிர்வாக இயக்குநர் ரவீந்திர எஸ். சிங்வி.

இதுகுறித்து வெள்ளிக்கிழமை செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி:

எங்களது சர்க்கரை ஆலையின் மூலம், தினசரி 5 ஆயிரம் டன் கரும்புகள் அறவை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஆண்டிற்கு 15 லட்சம் டன் கரும்பு அறவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு வங்கிகள் மூலமும், ஆலையின் மூலமும் மேம்பாட்டுக் கடன் வழங்கப்படும். முருகப்பா குழுமத்தில் உள்ள கோரமண்டல் இண்டர் நேஷனல் மூலம், விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஆலையிலேயே மண் மாதிரி ஆய்வு செய்து, எந்த வகையான உரமிடலாம் என்ற அறிக்கை இலவசமாக வழங்கப்படும்.

கரும்பு அறுவடை செய்ய இப்போது வெளியூர்களிலிருந்து அதிக அளவில் தொழிலாளர்கள் வரவழைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு பயணப்படி, தங்குவதற்கு தரமான குடில்கள், பாதுகாப்பு போன்றவை செய்து தரப்பட்டுள்ளது.

இந்தத் தொழிலாளர்களின் பிரச்னைகளைச் சமாளிக்கும் வகையில், வருகிற டிசம்பர் மாதத்திற்குள் 5 புதிய நவீன கரும்பு அறுவடை இயந்திரங்கள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் அறுவடை செய்ய டன் ஒன்றுக்கு ரூ. 360 செலுத்தினால் போதுமானது. இந்த இயந்திரம் மூலம் ஒரு மணி நேரத்தில் 20 டன் கரும்புகளை அறுவடை செய்யலாம். எனவே, விவசாயிகள் ஐந்தரை அடி இடைவெளியில் கரும்பு நடவு செய்தால், விரைவாக அறுவடை பணிகளை முடிக்கலாம்.

வெட்டப்பட்ட கரும்பின் எடை, தொகை முதலிய விபரங்கள் விவசாயிகளுக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்படும். கரும்புக்கான தொகை வவசாயிகளின் வங்கிக் கணக்கில் கரும்பு வெட்டப்பட்ட 14 நாட்களுக்குள் செலுத்தப்பட்டு, அவர்களின் செல்போனுக்கு எஸ்.எம்.எஸ். மூலம் உடனே தெரிவிக்கப்படும்.

விவசாயிகள் சொந்தமாக டிரைலர், லாரிகள் வாங்க வங்கிகள் மூலமும், சோழா நிதி நிறுவனம் மூலம் ஏற்பாடு செய்யப்படும். இதற்கான முன்பணம் ஆலை மூலம் வழங்கப்படும். மேலும், வயல்களில் சொட்டுநீர்ப்பாசனம் அமைக்க, காலி நிலங்களில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க, நிலங்களைச் சமப்படுத்த, பராமரிக்க வங்கிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படும்.

விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்ய புதுக்கோட்டை அறந்தாங்கி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 7 கரும்புக் கோட்ட அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்றார் அவர். ஆலையின் உப தலைவர் ரமேஷ் பொன்னுசாமி, பொது மேலாளர்கள் எஸ். பொன்னப்பன் (கரும்பு), எஸ். ராதாகிருஷ்ணன் (நிர்வாகம்) உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**விதை தேர்வுக்கான எளியமுறை பயிற்சி**

First Published : 28 Aug 2011 02:11:45 PM IST

ஸ்ரீவைகுண்டம், ஆக. 27: ஆழ்வார்திருநகரி வட்டாரத்தில் விதை தேர்வுக்கான எளியமுறை பயிற்சி நடைபெற்றது.

ஆழ்வார்திருநகரி வட்டாரம், கடையனோடையில் நடைபெற்ற இப்பயிற்சிக்கு, வேளாண் அலுவலர் சண்முகசுந்தரம் தலைமை வகித்தார். உதவி வேளாண் அலுவலர் வி. கண்ணன் வரவேற்றார்.

வேளாண்மை கல்லூரி மாணவிகள் அபி, பாரதி, கீதா, கார்த்திகா, கலா, மேரி, சத்யா ஆகியோர் விதை தேர்வுக்கான எளிய செயல் விளக்கங்களையும், மண்புழு உரம் தயாரிப்பு பற்றியும், அதன் பயன்கள் பற்றியும் பேசினர். வேளாண் அலுவலர்
எஸ். கண்ணன் நன்றி கூறினார்.

**உரிமம் இன்றி விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த விதைகள் முடக்கம்**

First Published : 28 Aug 2011 02:46:07 PM IST

பெரம்பலூர், ஆக. 27: பெரம்பலூர் மாவட்டத்தில் தனியார் விதை விற்பனை நிலையங்களிலிருந்து, உரிய ஆவணங்கள் மற்றும் விதை விற்பனை உரிமம் பெறாமல் இருப்பு வைக்கப்பட்டிருந்த ரூ. 8 லட்சம் மதிப்பிலான விதைகள் விற்பனை முடக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திருச்சி விதை ஆய்வு துணை இயக்குநர் (பொறுப்பு) பா. ரங்கராஜன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விதை விற்பனை நிலையங்களில் பல்வேறு பயிர் ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு விதைகள் குறிப்பாக, வீரிய மக்காச்சோளம் என்கே 6240 ஐ கூடுதலை விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும், அதன் தரத்தில் சந்தேகமிருப்பதாகவும் விவசாயிகள் புகார் தெரிவித்தனர். அதனடிப்படையில், கோவை விதை ஆய்வு இணை இயக்குநர் கோபால் தலைமையில், விதை ஆய்வு துணை இயக்குநர் தனசேகரன், விதை ஆய்வாளர்கள் கொண்ட குழுவினர், பெரம்பலூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள விதை விற்பனை நிலையங்களில் வியாழக்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இதில், உரிய ஆவணங்கள் இல்லாமலும், விதை விற்பனை உரிமம் பெறாமலும் ரூ. 8 லட்சம் மதிப்புள்ள விதைகள் இருப்பு வைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டு, அந்த விதைகளின் விற்பனை முடக்கப்பட்டது. அதிலிருந்து விதை மாதிரிகள் எடுத்து முளைப்புத்திறன் உறுதி செய்வதற்காக விதை பரிசோதனை நிலையத்துக்கும், இனத்தூய்மை பரிசோதனைக்காக கோவை விதைப் பகுப்பாய்வாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் போது, விவசாயிகளுக்கு முறைப்படி பட்டியல் வழங்காதது, விதைகளுக்கு உரிய ஆவணங்கள் இல்லாமலிருப்பது, விதை இருப்பு பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படாமலும், விதைச்சட்டம் 1966 மற்றும் விதைக்கட்டுப்பாடு ஆணை 1983-ன் படி உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றார் அவர்.

தினமலர்

**மானிய விலையில் விதைகள் தோட்டக்கலை துறை ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2011,01:13 IST

தூத்துக்குடி : புதுக்கோட்டை வட்டாரத்தில் தோட்டக்கலை துறையின் சார்பில் மானிய விலையில் விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது. இதுகுறித்து தோட்டக்கலை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளதாவது, புதுக்கோட்டை வட்டாரத்தில் தோட்டக்கலைத்துறையின் கீழ் வீரிய ஒட்டு காய்கறி விதைகள் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் காய்கறி சாகுபடி பரப்பினை அதிகரிக்கவும் காய்கறி உற்பத்தியினை அதிகரிக்கவும், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் வீரிய ஒட்டு காய்கறி விதைகள் வழங்கப்பட்டு வருகின்றது. நடப்பு வருடமும் ஆடிப்பட்டத்தில் காய்கறி சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு மானிய விலையில் வழங்குவதற்காக காய்கறி விதைகள் புதுக்கோட்டை வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இத்துடன் மா, சப்போட்டா, எலுமிச்சை, நெல்லி, மாதுளை, பப்பாளி போன்ற பழமரக்கன்றுகளும் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**தென்னை விவசாயிகளுக்கு தோட்ட கலைத்துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2011,00:09 IST

கிணத்துக்கடவு : "கிணத்துக்கடவு பகுதி தென்னந்தோப்புகளில் "கோகோ' சாகுபடி செய்தால், தென்னை விளைச்சல் அதிகரிக்கும்' என தோட்டக்கலைத்துறை தெரிவித்துள்ளது. கோவை மாவட்டத்தில் தென்னையில் ஊடுபயிராக "கோகோ' பயிரிடுவதன் மூலம் தென்னை விளைச்சல் அதிகரிக்கிறது. ஆண்டுக்கு 800 கிலோ இலைகள் உதிர்வதால், மண்ணில் அங்கக சத்து உயர்கிறது. சிறந்த முறையில் களை கட்டுப்பாடு செய்யப்படுகிறது. மண் அரிமானம் தடுக்கப்படுகிறது. மண்ணின் ஈரப்பதம் காக்கப்படுகிறது. ஒரு ஏக்கரில் "கோகோ' பயிரிடுவதற்கு 200 முதல் 220 நாற்றுகள் தேவைப்படும். ஆண்டுக்கு மரம் ஒன்றில் இருந்து இரண்டு கிலோ உலர் விதைகள் கிடைக்கும். ஆண்டு விளைச்சல் 400 கிலோ உயரும். ஆண்டு வருமானம் 28 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும். இதில் செலவு போக நிகர லாபம் 20 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு கிடைக்கும் என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் முகமது இக்பால் தெரிவித்துள்ளார்.

**அணைக்கு வரத்து அதிகரிப்பு மெல்ல உயருது நீர்மட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2011,00:06 IST

பொள்ளாச்சி : மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழை பொழிவு குறைந்திருந்தாலும், ஆழியாறு அணைக்கு நீர்வரத்துள்ளதால், அணையின் நீர்மட்டம் மெல்ல உயர்ந்து வருகிறது. பொள்ளாச்சி சமவெளி, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில், ஒரு மாதமாக பருவ மழை பெய்து வந்ததால், பி.ஏ.பி., திட்ட முக்கிய அணைகளான பரம்பிக்குளம், சோலையாறு உள்ளிட்ட அணைகள் நிரம்பி வழிகின்றன. மற்ற அணைகளான ஆழியாறு, திருமூர்த்தி ஆகிய அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக மழை பொழிவு குறைந்ததால், அணைகளின் நீர் மட்டம் உயர்வது தடைப்பட்டது. தற்போது, ஒரு சில பகுதிகளில் மீண்டும் மழை பெய்து வருவதால், ஆழியாறு அணையின் நீர் மட்டம் மீண்டும் உயரத்துவங்கியுள்ளது. சோலையாறு அணையின் 160 அடி உயரத்தில் 161.83 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 2,039 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது. அணையிலிருந்து, 2,100 கன அடி தண்ணீர் வெளியேற்றமாகிறது.

பரம்பிக்குளம் அணையின் 72 அடி உயரத்தில் 71.90 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 2,345 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது. அணையிலிருந்து விநாடிக்கு 2,425 கன அடி தண்ணீர் உபரியாக வெளியேற்றப்படுகிறது. ஆழியாறு அணையின் 120 அடி உயரத்தில் 115.20 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 499 கனஅடி தண்ணீர் வரத்தாகவும், 186 கனஅடி தண்ணீர் வெளியேற்றமாகவும் உள்ளது. திருமூர்த்தி அணையில் 46.21 அடியும், அமராவதி அணையில் 57.81 அடியும் நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 367 கன அடி தண்ணீர் வரத்தாகவும், அணையிலிருந்து 700 கன அடி தண்ணீர் வெளியேற்றமாகிறது. நேற்று காலை 8.00 மணி வரை பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்): சோலையாறில் 36, பரம்பிக்குளத்தில் 11, மேல்நீராறில் 46, கீழ் நீராறில் 28 , வால்பாறையில் 15.

**வேளாண் மாணவியருக்கு திருந்திய நெல் சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2011,02:24 IST

குளித்தலை: தமிழ்நாடு வேளாண் பல்கலை, திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் மாணவியருக்கு பேருக்கு திருந்திய நெல்சாகுடி பயிற்சி அளிக்கப்பட்டது.

கரூர் மாவட்டம் குளித்தலை அடுத்த கீழக்குட்டப்பட்டியை சேர்ந்த மகாலிங்கம் என்பவரின் நிலத்தில் தமிழ்நாடு வேளாண்மைக் பல்கலைக்கழகம், திருச்சி அன்பில் தர்மலிங்கம்

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச் சி நிலைய மாணவிகள் 10 பேரு க்கு திருந்திய நெல் சாகுபடி செ ய்யும் முறையை வேளாண் உத வி இயக்குனர் கணேசன் விளக்கினார். இம்முறையினால், குறைந்த விதையளவு, குறைவான நீர் அளவு, மகசூல் அதிகம் கிடைப்பது பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். எஸ்.எஸ்.ஆர்., முறையில் களை எடுப்பதற்கான மிக எளிய கருவி "கேனோ வீடர்' பயன்படு த்தி, நடுவதையும் விவசாயிகளுக்கு மாணவிகள் விளக்கினர்.

**ஏலக்காய் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2011,23:21 IST

பந்தலூர் : ஏலக்காய்க்கு போதிய விலை கிடைக்காததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, காய்கறி விவசாயம் மட்டுமின்றி, காபி, ஏலம், இஞ்சி, மஞ்சள் உட்பட விளை பயிர்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டுக்கு ஒருமுறை பயன் தரும் ஏலக்காய் விவசாயம், பந்தலூரில் அதிகளவு மேற்கொள்ளப்படுகிறது. 4 கிலோ பசுங்காயை உலர வைத்தால், ஒரு கிலோ ஏலக்காய் கிடைக்கிறது. இதை உள்ளூர் மற்றும் ஆந்திர மாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள், நேரடியாக கொள்முதல் செய்கின்றனர். கடந்தாண்டு கிலோவுக்கு 1,600 ரூபாய் வரை விற்பனையான நிலையில், தற்போது 600 ரூபாய் மட்டுமே கிடைப்பதால், வியாபாரிகள் கவலையடைந்துள்ளனர்

**வனத்துறைக்கான புதிய நிலஎல்லை வரைபடம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2011,22:17 IST

பழநி : வனத்துறைக்கான புதிய நில வரைபடம் தயாரிக்கும் பணி, ஜி.பி.எஸ்., கருவி மூலம் நடக்கிறது. வனப்பகுதியில் தீவிர கண்காணிப்பால் வன விலங்குகளை வேட்டையாடுதல் குறைந்துள்ளது. இருந்த போதிலும், உணவு, தண்ணீர் தேவைக்காக, வனவிலங்குகள் எல்லையை தாண்டி வருவதால், அவற்றை பாதுகாப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எல்லை விரிவாக்கத்தில், ஆக்கிரமிப்பு வனப்பகுதிகள் மீட்கப்பட்டு வருகிறது. வனவிலங்குகளுக்கு கூடுதலாக பாதுகாப்பு ஏற்பாடுகளை உருவாக்கும் வகையில், தற்போதைய நில எல்லை அமைப்புப்படி, வரைபடம் தயாரிக்கும் பணிகள் துவங்கியுள்ளன. வனத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: வனத்துறையின் திட்ட செயலாக்கத்திற்கு, ஆங்கிலேயர் காலத்தில் தயாரிக்கப்பட்ட வன எல்லை வரைபடம் பயன்படுத்தப்படுகிறது. வனத்துறையின் மொத்த நிலப்பரப்பு அதிகரித்தபோதும், பழைய வரைபடமே பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதனால், தற்போதைய நில

அமைப்பின்படி, வன எல்லை குறித்த புதிய வரைபடம் தயாரிக்கும் பணிகள், ஜி.பி.எஸ்., கருவி உதவியுடன் துவங்கியுள்ளன, என்றார்.

**மானிய விலையில் மா, எலுமிச்சை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2011,22:11 IST

வத்தலக்குண்டு : தோட்டக்கலை துறையில் மானிய விலையில் மா, நெல்லி, வாழைக்கன்றுகள் வழங்கப்படுவதாக, உதவி இயக்குனர் சங்கர் தெரிவித்தார்.அவரது அறிக்கை: விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் 20 எக்டேரில் மா; நெல்லி; 10 எக்டேரில் எலுமிச்சை கன்றுகள் வழங்கப்படுகின்றன. தென்னையில் ஊடுபயிர் கோகோ சாகுபடி செய்ய 80 எக்டேருக்கு கன்றுகள் வழங்கப்பட உள்ளன. மேலும், 50 சதவீத மானியத்தில் வாழை, வெங்காய இடுபொருட்கள், திசு வாழைக் கன்றுகள், சம்பங்கி இடுபொருட்கள், பி.கே. எம்.1 தக்காளி விதைகள் வழங்கப்படுகின்றன. விவசாயிகள் இரண்டு போட்டோ, சிட்டா, அடங்கலுடன் தோட்டக்கலை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம், என்றார்

**நீலகிரி தேயிலை தோட்டங்களில் அனுமதியில்லா "சொகுசு பங்களாக்கள்'**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2011,01:11 IST

குன்னூர் : குன்னூர், கோத்தகிரியில், உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதி பெறாமல், தேயிலை தோட்டங்களுக்குள் சொகுசு பங்களாக்கள் கட்டப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில், குன்னூர், கோத்தகிரி, குந்தா உட்பட இடங்களில், பல 100 ஏக்கரில், தேயிலை தோட்டங்கள் உள்ளன. தேயிலை தொழில் எதிர்கொண்டுள்ள பிரச்னைகள், ஆட்கள் பற்றாக்குறை உட்பட காரணங்களால், விவசாயிகள் பலர் தங்கள் தோட்டங்களை விற்று வருகின்றனர். ரியல் எஸ்டேட் நிறுவனத்தினரின் "பிளாட்' பட்டியலில், நீலகிரி தேயிலை தோட்டங்கள் இடம் பிடித்து வருகின்றன. தேயிலை தோட்டங்களை தொழிலதிபர்கள், சினிமா பிரபலங்கள் வாங்கி வருகின்றனர்; அவர்கள், தேயிலை தோட்டங்களை அழித்து ஆடம்பர சொகுசு பங்களா கட்டுவதில் முனைப்பு காட்டுகின்றனர். தேயிலை தோட்டங்களை அழித்து, வீடு உட்பட கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ள நிலையில், பல இடங்களில் தேயிலை தோட்டங்கள் கான்கிரீட் காடுகளாக மாறி வருகின்றன. குன்னூர் புரூக்லேண்ட்ஸ் பகுதியில், சுமார் 60 சென்ட் தேயிலை தோட்டத்தை வாங்கிய தொழிலதிபர் ஒருவர்,தேயிலை தோட்டத்தை அழித்து, சாலை அமைத்த நிலையில், மண் சரிவு ஏற்படும்

அபாயம் ஏற்பட்டது. இந்த புகாரால், அரசு அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு கட்டுமான பணிகளை நிறுத்தினர். இத்தகைய விதிமீறலுக்கு காரணமானவர்கள் குறித்த விசாரணை நடந்து வருகிறது. கோத்தகிரியில், சுமார் 100 ஏக்கர் தேயிலை தோட்டத்தில், பிளாட் கட்டி, ஒரு பிளாட் தலா 1.25 கோடி ரூபாய்க்கு விற்கப்படுகிறது; அவற்றை, "சில பிரபல சினிமா பின்னணி பாடகர்கள், இசையமைப்பாளர்கள், சில ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் விலைக்கு வாங்கி வருகின்றனர்' என தெரிகிறது. குந்தாவிலும் இதே போன்று பிளாட் விற்பனை களை கட்டியுள்ளது.குன்னூர் நுகர்வோர் பாதுகாப்பு சங்க செயலர் சபாபதி கூறுகையில், ""இயற்கைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விவசாய தோட்ட அழிப்பு விவகாரத்தில், மாவட்ட நிர்வாகத்தின் நிலைபாடை தெளிவுப்படுத்த வேண்டும்,'' என்றார்.தேசிய பசுமை திட்ட முதன்மை பயிற்றுனர் மனோகரன் கூறுகையில், ""பாதுகாக்கப்பட வேண்டிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள குந்தா கிண்ணக்கொரையில், சுமார் 100 ஏக்கர் தேயிலை தோட்டம், பிளாட் போடப்பட்டு விற்கப்பட்டு வருகிறது'' என்றார்.நில நடுக்க பட்டியலில் இடம்பெற்றுள்ள நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாய பூமிகள், கட்டட காடுகளாக மாறாமல் இருக்க, மாநில அரசின் சிறப்பு கவனம் அவசர அவசியம்.

**தேயிலை விவசாயிகள் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2011,01:11 IST

பந்தலூர் : "தேயிலை விவசாயிகள் ஒற்றுமையாக செயல்பட்டால் மட்டுமே தேயிலை சார்ந்த பலன்களை பெற இயலும்,' என அறிவுறுத்தப்பட்டுள்ளது.பந்தலூர் அருகே கல்பறா பகுதியில் அம்மன்காவு, கல்பறா, மாங்கம் வயல் சிறு விவசாயிகள் தேயிலை உற்பத்தியாளர் சங்கம் துவக்க விழா நடந்தது. சங்க தலைவர் ஜோஸ் வரவேற்றார். தேயிலை வாரிய துணை இயக்குனர் டியோரி முன்னிலை வகித்து பேசுகையில், ""நீலகிரி மாவட்டத்தின் பொருளாதாரம் தேயிலை யை சார்ந்துள்ளதால் தேயிலை விவசாயிகள் பெயரளவிற்கு விவசாயத்தில் ஈடுபடாமல் முழு மனதுடன் செயலாற்றிட வேண்டும். தற்போது தேயிலை வாரியத்தின் மூலம் மானிய விலையில் தேயிலை இலை பறிக்கும் இயந்திரம், கவாத்து இயந்திரம், வாகன வசதிகள், இலை பைகள் போன்றவை வழங்கப்படுகிறது. அவற்றை பெறுவதற்கு விவசாயிகள் ஒற்றுமையுடன் சங்கத்தில் இணைந்து செயலாற்றிட வேண்டும்,'' என்றார். சளிவயல் சிறு தேயிலை உற்பத்தியாளர் சங்க துணை தலைவர் சாஜி பேசுகையில், ""தென் மாநிலங்களில் சிறந்த சங்கமாக சளிவயல் சங்கம் மாறி வரும் நிலையில், கல்பறா சுற்றுவட்டார சிறுதேயிலை விவசாயிகள் தேயிலை வாரியத்தின் ஆலோசனைகளை கேட்டு தெளிவுபெற்று சிறப்பான முறையில் செயலாற்றினால் அந்த வாய்ப்பு இந்த பகுதிக்கும் கிடைக்கும்,''என்றார்.விவசாயிகள் சங்கம் மூலம் இலை சேகரித்து சேரம்பாடி வென்ட்வொர்த் தேயிலை தொழிற்சாலைக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது. தொடர்ந்து உபாசி

ஆலோசகர் சங்கரநாராயணன், சி.இ.சி. செயலாளர் ஹரிபிரசாத், செயலாளர் அந்தோணி, குன்னூர் பகுதி நிர்வாகி ராஜா, எச்.எம்.எல். நிறுவன ஆலோசகர் மாதவன், சங்க பொருளாளர் பேபி, துணை தலைவர் அன்னாமலை, துணை செயலாளர் ஷாஜி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். செயலாளர் யேசுதாஸ் நன்றி கூறினார்.

**கொள்முதல் நிலையங்களில் நெல் வாங்க மறுக்கின்றனர்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2011,01:56 IST

மதுராந்தகம்:""அரசு நெல் கொள்முதல் நிலையங்களில், நெல் விற்க விரும்பும் விவசாயிகள், நிலத்தின் கம்ப்யூட்டர் சிட்டா, தங்களின் புகைப்படம், ஆகியவற்றை கொடுத்து, முன் பதிவு செய்து கொள்ள வேண்டும்," என, கலெக்டர் உத்தரவிட்டார்.காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு கூட்டம், மதுராந்தகத்தில் கடந்த 25ம் தேதி நடந்தது. கலெக்டர் சிவசண்முகராஜா தலைமை தாங்கினார். ஆர்.டி.ஓ., ஆலின்சுனேஜா முன்னிலை வகித்தார். கூட்டத்தில், மதுராந்தகம் ஏரி பாசன சங்கத் தலைவர் நாராயணன் பேசும்போது,"" மதுராந்தகத்தில் விவசாயிகள் அறுவடை முடித்து, நெல் மூட்டைகளை சாலையில் அடுக்கி வைத்துள்ளனர். அரசு நெல் கொள்முதல் நிலையங்களில், நெல் வாங்க மறுக்கின்றனர். தனியார் வியாபாரிகள் 90 கிலோ எடையுள்ள மூட்டைக்கு, 550 ரூபாய் மட்டும் தருகின்றனர். அரசு கொள்முதல் நிலையத்தில், நெல் விற்பனை செய்தால் எங்களுக்கு லாபமாக இருக்கும். ஒரு ஏக்கர் விவசாயம் செய்ய 15 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. தனியார் வியாபாரிகள் கொண்டு வரும் நெல்லை மட்டும், கொள்முதல் நிலையங்களில் வாங்குகின்றனர்.

சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளிடம் நெல் வாங்காததால், விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்," என்றார்அதற்கு பதில் அளித்த கலெக்டர்," அரசு நெல் கொள்முதல் நிலையங்களில், நெல் விற்பனை செய்ய வருவோரிடம், கம்ப்யூட்டர் சிட்டா மற்றும் புகைப்படம் பெற்றுக் கொண்டு, முன்பதிவு செய்ய வேண்டும். விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை மட்டும் வாங்க வேண்டும்' என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் நேரு பேசும்போது,""அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் குண்டு ரக நெல் எடுப்பதில்லை. தனியார் வியாபாரிகளிடம்தான் நெல் கொள்முதல் செய்கின்றனர். விவசாயிகளிடம் நெல் வாங்குவது இல்லை. படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். உத்திரமேரூர் பகுதியை, படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையுடன், இணைக்க வேண்டும்," என்றார்.

**துல்லிய பண்ணையம் திட்டம் 4ல் ஒரு பங்காக குறைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2011,23:06 IST

கடலூர் : துல்லிய பண்ணையம் அமைக்கும் திட்டத்தில் தமிழக அரசு பயனாளிகள் எண்ணிக்கையை 4ல் ஒரு பங்காக குறைத்துள்ளது. குறைந்த தண்ணீரைக் கொண்டு சிறந்த மகசூல் எடுக்கும் திட்டம் தான் துல்லிய பண்ணையம் திட்டம். இத்திட்டத்தில் சொட்டு நீர் பாசனம் மூலம் பயிருக்குத் தேவையான குறைவான தண்ணீரை பயன்படுத்தி சிறந்த மகசூலை பெறலாம். தண்ணீர் பற்றாக்குறை உள்ள தர்மபுரி, சேலம், ஈரோடு உள்ளிட்ட பல மாவட்டங்களில் இத்திட்டம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. அதேப்போன்று இத்திட்டத்தினால் பயிருடன் வளரும் "களை' கள் கட்டுப்படுத்தப்படுவதால் விளைச்சல் அதிகரிக்கும். கடந்த தி.மு.க., ஆட்சி காலத்தில் 65 சதவீதம் மானிய உதவியுடன் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆண்டுதோறும் மாவட்டத்தில் 400 எக்டர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அ.தி.மு.க., ஆட்சி பொறுப்பேற்றவுடன் இத்திட்டத்திற்காக 100 சதவீதம் அரசு மானியத்தடன் செயல்படுத்தப்படும் என முதல்வர் அறிவித்தார். ஆனால் 400 எக்டர் பரப்பு என இருந்ததை குறைத்து வெறும் 100 எக்டராக மாற்றப்பட்டுள்ளது. இதனால் துல்லிய பண்ணையம் அமைக்க விவசாயிகளிடையே கடும் போட்டி இருக்கும் என எதிர்பாக்கப்படுகிறது.

**கரும்பு, நெல் விலையை உயர்த்திட விவசாய சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2011,23:24 IST

விழுப்புரம் : இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் கரும்பு விவசாயிகள் சமுதாயக் கூடத்தில் நடந்தது. தலைவர் ராஜா தலைமை தாங்கினார். நிர்வாகிகள் தணிகாசலம், யோகநாதன், அஜீத்தன், புத்தி சிகாமணி முன்னிலை வகித்தார். பொதுச் செயலாளர் விருத்தகிரி வரவேற்றார்.
தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள ஜெ., விற்கு வாழ்த்து தெரிவித்தல், கிராமப்புற மக்களுக்கு இலவச ஆடு, மாடுகள் வழங்கும் திட்டத்திற்கு வரவேற்பு, தேசிய விவசாயிகள் ஆணையக்குழு தலைவர் எம்.எஸ்.சுவாமி நாதன் குழுவின் பரிந்துரையை மத்திய அரசு அமல்படுத்த வேண்டும். வரும் 2011-2012ம் ஆண்டு பருவத்திற்கு கரும்பு ஒரு டன்னிற்கு 2,500 ரூபாயும், நெல் குவிண்டாலுக்கு 1,500 ரூபாயும் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முண்டியம்பாக்கம் சர்க்கரை ஆலை சங்க நிர்வாகிகள் கோவிந்தன், ஆறுமுகம், பாண்டியன், வெங்கடசாமி, பரமசிவம், பாலசுப்ரமணியம், கலிவரதன், ஆந்திர மாநில இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள் ஜெயச்சந்திர சவுத்ரி,

விஜயசந்திர நாயுடு, பயிர்வாரிய குழு செயலர்கள் கோதண்டராமன், சுப்ரமணியன், கண்ணன், ஆர்ஜீதம், விஸ்வ நாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

தினத் தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

***மத்திய அமைச்சர் தகவல்: கடந்த நிதி ஆண்டில் வங்கிகள் வழங்கிய வேளாண் கடன் ரூ.4.46 லட்சம் கோடியாக உயர்வு***




*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் இந்திய வங்கிகள் வழங்கிய வேளாண் கடன் ரூ.4.46 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. வேளாண் துறைக்கான ராஜாங்க அமைச்சர் ஹரீஷ் ராவத் அண்மையில் பாராளுமன்றத்தில் இதனை தெரிவித்தார். அவ்வாண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ.3.75 லட்சம் கோடியையும் தாண்டி வேளாண் கடன் சுமார் ரூ.71,000 கோடி அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*வணிக வங்கிகள்*

*சென்ற நிதி ஆண்டில் வணிக வங்கிகள் மட்டும் ரூ.3.32 லட்சம் கோடியை விவசாய கடனான வழங்கியுள்ளன. மீதமுள்ள தொகையை கூட்டுறவு வங்கிகளும், மண்டல ஊரக வங்கிகளும் வழங்கியுள்ளன. கடந்த சில ஆண்டுகளாக மத்திய அரசு நிர்ணயிக்கும் இலக்கை தாண்டி*

*வங்கிகள் வெற்றிகரமாக வேளாண் கடனை வழங்கி வருகின்றன. நடப்பு நிதி ஆண்டில் ரூ.4.75 லட்சம் கோடி விவசாய கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*இந்திய வங்கிகள் 7 சதவீத வட்டியில் வேளாண் கடன்களை வழங்கி வருகின்றன. கடந்த 2006–07–ஆம் ஆண்டு கரீஃப் பருவத்திலிருந்து, ரூ.3 லட்சம் வரையிலான விவசாய கடனுக்கு இந்த வட்டி விகிதத்தில்தான் கடன் வழங்கப்பட்டு வருகிறது. 2009–10–ஆம் நிதி ஆண்டில், குறுகிய கால பயிர்க் கடனை குறித்த காலத்தில் திரும்ப செலுத்திய விவசாயிகளுக்கு வட்டியில் ஒரு சதவீத தள்ளுபடி சலுகை வழங்கி, அந்த சுமையை அரசே ஏற்றுக் கொண்டது.*

*வட்டியில் சலுகை*

*2010–11–ஆம் நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில், குறித்த காலத்தில் கடனை திரும்ப செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில் மேலும் ஒரு சதவீதம் தள்ளுபடி சலுகை அளித்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனையடுத்து இத்தகைய விவசாயிகளுக்கு 5 சதவீத வட்டி மட்டுமே வசூலிக்க வகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு 2011–12–ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் மேலும் ஒரு சதவீத தள்ளுபடி சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இதனால் கடனை சரிவர செலுத்தும் விவசாயிகளிடம் 4 சதவீத வட்டி மட்டுமே வசூலிக்கப்படும். இதனால் வங்கிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை மத்திய அரசு ஈடு செய்கிறது.*

## ரம்ஜான், ஓணம் பண்டிகை: கேரளாவில் இறைச்சி, காய்கறிகள் விலை கிடுகிடு உயர்வு

*பெரும்பாவூர்,ஆக.29–*

*ரம்ஜான், ஓணம் பண்டிகையையொட்டி கேரளாவில் இறைச்சி, காய்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்து விட்டது.*

*இறைச்சி விலை உயர்வு*

*கேரள மாநிலத்தில் அடுத்த மாதம் 9–ந்தேதி ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது. அதற்கு முன்பாக 31–ந்தேதி ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்படுகிறது. ரம்ஜான், ஓணம் பண்டிகையையொட்டி கேரளாவில் அனைத்து பகுதிகளிலும் சிறப்பு சந்தைகள் தொடங்கப்பட்டு உள்ளன.*

*ரம்ஜான் பண்டிகைக்கு இன்னும் 2 நாட்களே இருப்பதால் கேரளாவில் இறைச்சி விலை கிடுகிடுவென உயர்ந்து விட்டது. அது பற்றிய விவரம் வருமாறு:–*

*ஒரு கிலோ ஆட்டு இறைச்சி 250 ரூபாயில் இருந்து 280 ரூபாய்க்கு விற்றது. இப்போது ஒரு கிலோ ஆட்டு இறைச்சி 320 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. முன்பு 90 ரூபாய் முதல் 110 ரூபாய் வரை விற்ற ஒரு கிலோ கோழி இறைச்சி இப்போது 130 ரூபாய் முதல் 140 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஒரு கிலோ மாட்டுக்கறி 80 ரூபாய்க்கு விற்றது இப்போது 120 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்கப்படுகிறது.*

*காய்கறிகள், பழங்கள் விலையும் உயர்ந்தது*

*இதே போல் ஓணம் பண்டிகைக்கு சில நாட்களே இருப்பதால் கேரளாவுக்கு காய்கறிகளின்*

வரத்து அதிகரித்து உள்ளது. வரத்து அதிகரித்த போதிலும் விலை குறைந்தபாடில்லை. கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ பெரிய வெங்காயம் 12 ரூபாய்க்கு விற்றது இப்போது 22 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. ஒரு கிலோ நேந்திரக்காய் 25 ரூபாய்க்கு விற்றது இப்போது 38 ரூபாய்க்கும், நேந்திரம்பழம் கிலோ 28 ரூபாய்க்கு விற்றது இப்போது 38 ரூபாய்க்கும், 30 ரூபாய்க்கு விற்ற பூவன் பழம் இப்போது 45 ரூபாய்க்கும் விற்பனையாகிறது.

முன்பு ஒரு கிலோ தட்டைபயிறு 24 ரூபாய்க்கு விற்றது. ஆனால் இப்போது 50 ரூபாய்க்கும், 24 ரூபாய்க்கு விற்ற பாகற்காய் இப்போது 45 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. காய்கறிகளின் விலை அதிகரித்த போதிலும் விற்பனையில் பாதிப்பில்லை என்று வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

## பண்டிகை காலத்தில் பால் விலை உயரும் அசோசெம் தகவல்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

மும்பை

எதிர்வரும் பண்டிகை காலத்தில் பால் மற்றும் பால் பொருள்களின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது என அசோசெம் அமைப்பு தெரிவித்துள்ளது. அண்மைக் காலத்தில் நாட்டின் பல பகுதிகளில் உற்பத்தி மற்றும் சப்ளை குறைந்தது போன்ற காரணங்களால் விலை உயரும் சூழ்நிலை உருவாகியுள்ளதாக தெரிகிறது.

கடந்த ஓராண்டில் பால் விலை 25–30 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனால் உணவுப் பணவீக்கம் மேலும் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகஸ்டு 13–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் இப்பணவீக்கம் 9.8 சதவீதமாக உள்ளது.

இந்நிலையில் ஏற்றுமதி அதிகரிப்பால் கால்நடைத் தீவனங்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனாலும் பால் உற்பத்தி பாதிக்கப்படும் நிலை உள்ளது. பால் விலை உயரும்போது வெண்ணெய், நெய், பாலாடைக் கட்டி போன்ற பால் சார்ந்த பொருள்களின் விலையும் உயர்ந்து விடுவது வழக்கம். மேலும் பால் பொருள்களை பிரதான மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படும் உணவுப் பண்டங்களின் விலை அதிகரித்து

*விடும். ஆக, பால் விலை உயர்வு சங்கிலித் தொடர் போல் நுகர்பொருள் துறையின் பல்வேறு பிரிவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.*

*சர்வதேச அளவில் நம் நாடு பால் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் ஆண்டுதோறும் 11 கோடி டன் பால் உற்பத்தி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அதே சமயம் தேவைப்பாடு உயர்ந்து வருவதற்கேற்ப பால் உற்பத்தி வளர்ச்சி அடையவில்லை என்பது பின்னடைவாக உள்ளது.*

---

## தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உணவு பதப்படுத்தும் மையங்களை அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் தகவல்

*கோவை, ஆக.29–*

*தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்ப மையங்களை அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு உள்ளதாக வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கூறினார்.*

*கருத்தரங்கு*

*கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழகம், கனடா நாட்டில் உள்ள குவலப் பல்கலைக்கழகம், இலங்கை நாட்டைச் சேர்ந்த தொழிலக தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் கோவையைச் சேர்ந்த மைராடா என்ற அரசு சாரா நிறுவனங்களின் விஞ்ஞானிகள் தயாரித்த நானோ படலம் குறித்த ஆய்வுத் திட்டவரைவு தயார் செய்து உள்ளனர்.*

*இதற்கான கருத்தரங்கு வேளாண் பல்கலைக்கழகத்தில் நடந்து வருகிறது. இதன் தொடக்க விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடந்தது. பல்கலைக்கழக இயற்கை வள ஆதார மேம்பாட்டு துறை சிறப்பு அலுவலர் வி.வேலு வரவேற்றார். துணைவேந்தர் முருகேசபூபதி கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*உற்பத்தி இழப்பு*

*உலக அளவில் 11 சதவீத அளவுக்கு பழங்களை நமது நாடு உற்பத்தி செய்து 2–ம் இடத்தை வகிக்கிறது. இருப்பினும் இந்தியாவில் அறுவடைக்கு பின் அதிக அளவில் பழங்கள் வீணாகி இழப்பு ஏற்படுகின்றன. குறிப்பாக 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை உற்பத்தி இழப்பு மற்றும் போக்குவரத்து மற்றும் சேமிப்பின் போது இழப்பு ஏற்படுகிறது. இதன் வாயிலாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ.40 ஆயிரம் கோடி மதிப்பிலான பழங்கள் மற்றும் காய்கறிகள் அழுகி வீணாகின்றன.*

*இதை தடுக்கும் வகையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மத்திய அரசின் திட்டக் குழுவுக்கு சுமார் ரூ.150 கோடி மதிப்பீட்டில் அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்புகளை தடுக்க உணவு பதப்படுத்துதல் தொழில்நுட்ப மையங்களை தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும்*

ரூ.5 கோடி வீதம் அமைப்பதற்கான திட்ட வரைவை நிதி ஒதுக்கீட்டுக்காக சமர்ப்பித்து உள்ளது. இதன் மூலம் அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்புகளை தடுக்க முடியும். மேலும் அந்த பகுதியில் உள்ள விவசாயிகள் இந்த மையங்களில் உள்ள வசதிகளை பயன்படுத்தி விவசாய பொருட்களை சேமிக்க முடியும். தற்சமயம் ஆராய்ச்சி திட்டம் மூலம் உருவாக்கப்பட்டு உள்ள நானோ படலம் பழங்களின் இருப்பு வைக்கப்படும் காலத்தை நீடிக்க வழிவகை செய்யும்.

இவ்வாறு அவர் கூறினார்.

ரசாயன பொருள்

இதை தொடர்ந்து கனடா நாட்டு குவல்ப் பல்கலைக்கழக விஞ்ஞானி ஜெயசங்கர் சுப்பிரமணியன் பேசும் போது, கனடா பல்கலைக்கழகம் தாவரங்களில் இருந்து 'ஹெக்சானல்' என்ற ரசாயன பொருளை கண்டறிந்து உள்ளது. இது பழங்களின் இருப்பு வைக்கும் காலத்தை நீடிக்கும் தன்மை கொண்டதாகும். அறுவடைக்கு பின் சேதம் ஆகும் மாம்பழங்களை சேமிக்க இந்த ரசாயன பொருள் உதவும் என்றார்.

விழாவில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், மாணவ–மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

## ஆட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு

# எந்திர மையத்திற்கு மாறி வரும் மஞ்சூர் பகுதி விவசாயிகள்

மஞ்சூர், ஆக.29-

நீலகிரி மாவட்டத்தில் உள்ள தேயிலை தோட்டங்களில் ஆட்கள் பற்றாக்குறையுடன், கூலியும் உயர்ந்து வருவதால் தேயிலை விவசாயிகள் எந்திர மையத்திற்கு மெல்ல மாறி வருகின்றனர்.

### கஷ்டம்

நீலகிரி மாவட்டத்தின் முதுகெலும்பாக விளங்கி வருவது தேயிலை தொழில். இந்த தேயிலை தொழிலை நம்பி ஆயிரக்கணக்கான கூலி தொழிலாளிகளும், விவசாயிகளும் வாழ்ந்து வருகிறார்கள்.

தற்போது நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தோட்டத்தில் மட்டுமின்றி காய்கறி பயிரிடுவதிலும் ஆட்கள் பற்றாக்குறை நிலவி வருகிறது. இதனால் விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக கஷ்டப்பட்டு வருகின்றனர்.

### பச்சை தேயிலை

இதற்கு முக்கிய காரணம் பச்சை தேயிலைக்கு கட்டுபடியான விலை கிடைப்பது இல்லை. தற்சமயம் மஞ்சூர் பகுதி கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் ஒரு கிலோ பச்சை தேயிலைக்கு ரூ.8 வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

ஆனால் பச்சை தேயிலை கிலோ ஒன்று அறுவடை செய்ய ரூ.4 வரை செலவாகிறது. மீதி 4 ரூபாய் கொண்டு பராமரிப்பு பணிகள் மற்றும் உரமிடுவதற்கே செலவாவதால் இந்த தொகையை கொண்டு அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது.

### நவீன எந்திரங்கள்

எனவே கடந்த சில மாத காலமாக ஆட்கள் பற்றாக்குறையை போக்க மஞ்சூர் பகுதி விவசாயிகள் பச்சை தேயிலையை பறிக்க நவீன தேயிலை பறிப்பு எந்திரங்களை பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்த நவீன எந்திரத்தை கொண்டு தேயிலை பறிப்பதால் ஒரு கிலோவிற்கு ரூ.1.50 மட்டும் செலவாகிறது. இது மட்டுமின்றி தேயிலைதோட்டங்களில் உள்ள பச்சை தேயிலை குறித்த நேரத்தில் பறிப்பதால் தேயிலை தோட்டங்களும் ஒரே சீராக இருந்து வருகிறது.



### மானியம்

இதனால் தேயிலை பறிப்பு எந்திரங்களை தேயிலை வாரியம் எடக்காடு, காந்தி கண்டி, பிக்கட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்துடன் வழங்கி வருகிறது. இந்த எந்திரத்தை பயன்படுத்தி வருவதால் விவசாயிகளுக்கு ஓரளவு பயன் ஏற்பட்டு உள்ளது.

தரமான தேயிலை தூள் உற்பத்தி செய்ய தேயிலை செடிகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கவாத்து செய்யப்பட வேண்டும் என்று தேயிலை வாரியம் மற்றும் உபாசி வலியுறுத்தி வருகிறது. ஆனால் தேயிலை செடிகளை கவாத்து செய்ய ஆட்கள் பற்றாக்குறை நிலவுகிறது.

### கவாத்து

இந்த தேயிலை தோட்டங்களில் உள்ள தேயிலை செடிகளை ஆட்கள் வைத்து கவாத்து செய்ய ஒரு தேயிலை செடிக்கு தற்சமயம் ரூ.2 முதல் ரூ.3 வரை செலவாகிறது.தற்சமயம் பச்சை தேயிலைக்கு கட்டுபடியான விலை கிடைப்பது இல்லை.

இதனால் தங்களது தேயிலை செடிகளை கவாத்து செய்யாமல் விவசாயிகள் விட்டு விடுகின்றனர். இதன் காரணமாக பெருத்த நஷ்டம் ஏற்பட்டு உள்ளது. மேலும் கவாத்து செய்ய ஆட்கள் பற்றாக்குறையும் ஏற்பட்டு வருகிறது.

### கவாத்து எந்திரம்

இதனை கருத்தில் கொண்டு தற்சமயம் தேயிலை செடிகளை கவாத்து செய்ய கவாத்து எந்திரம் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகள் இந்த நவீன எந்திரம் மூலம் தேயிலை செடிகளை கவாத்து செய்யும் பணியில் தற்சமயம் ஈடுபட்டு வருகின்றனர்.

எந்திரம் மூலம் கவாத்து செய்யும் போது ஒரு செடிக்கு அதிகபட்சமாக ரூ.1 வரை மட்டும் செலவாகிறது. மேலும் குறித்த நேரத்தில் கவாத்து செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்

### பராமரிப்பு

மேலும் தேயிலை தோட்டங்களில் மட்டம் சீர் செய்வதற்கென்றே தனி எந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு இந்த எந்திரத்தை கொண்டு மட்டம் சீர் செய்யப்படுவதால் செலவுகள் கட்டுப்படுத்தப் படுவதுடன் தேயிலை தோட்டங்களில் இந்த நவீன எந்திரத்தை கொண்டு நல்ல முறையில் பராமரிக்கும் பணிகளில் தற்சமயம் விவசாயிகள் ஈடுபட்டு வருகிறார்கள்.

மேலும் இந்த விவசாயிகளை ஊக்குவிக்கவும்,தரமான பச்சை தேயிலை பறிக்கவும் தேயிலை வாரியமும்,உபாசிவேளாண்மை அறிவியல் இயக்கமும் விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

எனவே இந்த நவீன எந்திரங்களை எளிய முறையில் குறைந்த மானிய விலையில் கிடைக்க தேயிலை வாரியம் கூடுதல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் வலியுறுத்தி வருகிறார்கள்.

தினகரன்

**கத்தரிக்காய் பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : 8/29/2011 1:29:16



செஞ்சி : செஞ்சி பகுதியில் கத்தரிக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே கோடிக்கொல்லை கிராமத்தில் விவசாயம் பிரதான தொழிலாக நடந்து வருகிறது. தற்போது மாலை நேரங்களில் மழை பெய்து வருவதால், விவசாயிகள் கத்தரிக்காயை பெருமளவில் பயிர் செய்து வருகின்றனர். சுமார் 400 ஏக்கரில் பயிரிட்டு வருகின்றனர்.

ஒரு ஏக்கருக்கு சுமார் 20 மூட்டை கத்தரிக்காய் பயிர் செய்யப்படுகிறது. தண்ணீர் அதிகம் தேவையில்லை, பயிர் செய்த 3 மாதத்தில் மகசூல் எடுத்து விடலாம். பராமரிப்பு பணிக்கும் அதிக ஆட்கள் தேவையில்லை. ஒரு ஏக்கர் பயிருக்கு 2 அல்லது மூன்று பேர் இருந்தால் போதும். 1 மூட்டை ஸி600க்கும், கிலோ ஸி15க்கும் விற்கப்படுகிறது. இங்கு விளையும் கத்தரிக்காய்கள் செஞ்சியில் உள்ள கடைகளுக்கும், சந்தைகளுக்கும் அனுப்பப்படுகிறது.

மேலும் வேலூர், திருவண்ணாமலை, திண்டிவனம், சேத்துப்பட்டு, வளத்தி, அவலூர்பேட்டை போன்ற ஊர்களுக்கு லாரிகள் மூலம் எடுத்து செல்லப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 20 மூட்டை கத்தரிக்காய் மகசூல் கிடைக்கிறது. இதன் மூலம் ஸி12 ஆயிரம் லாபம் கிடைப்பதாக விவசாயிகள்

கூறுகின்றனர். குறைந்த செலவில் அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகள் கத்தரிக்காயை பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**அசோசேம் கருத்து பால் விலை உயர வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : 8/29/2011 1:25:12



புதுடெல்லி : பண்டிகை காலம் தொடங்க உள்ள நிலையில், தேவைக்கேற்ற சப்ளை இல்லாத காரணத்தால் பால் மற்றும் அதன் துணை பொருட்களின் விலை உயரும் என இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பு (அசோசேம்) தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அசோசேம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: உலகிலேயே பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. நாடு முழுவதும் மொத்தம் 11 கோடி டன் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. அதேநேரம், அதிகரித்து வரும் பால் தேவைக்கேற்ப உற்பத்தி அதிகரிக்கவில்லை.
உற்பத்திக்கும் தேவைக்கும் இடைவெளி அதிகரித்து வருவதால் கடந்த 2005&06 முதல் 2010&11 வரை 8 அத்தியாவசிய பொருட்களின் விலை 72 சதவீதம் உயர்ந்துள்ளது. ஆனால், சராசரி தனி நபர் வருமானம் 38 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது. கடந்த ஓராண்டில் பால் விலை 25 முதல் 30 சதவீதம் அதிகரித்துள்ளது. பண்டிகைக் காலம் விரைவில் தொடங்க உள்ளதால் பால் தேவை அதிகரித்து அதன் விலை மேலும் அதிகரிக்கும். பால் விலை உயர்ந்தால், இனிப்பு, வெண்ணெய் உள்ளிட்ட பால் பொருட்களின் விலையும் உயரும். கால்நடை தீவன பற்றாக்குறை மற்றும் தீவன ஏற்றுமதி ஆகியவையும் பால் விலை உயர்வுக்கு மிக முக்கிய காரணமாக அமையும். இதனால் உணவுப் பணவீக்கம் மேலும் அதிகரிக்கும். கடந்த 13ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் இது 9.8 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.